**இன்றைய வேளாண் செய்திகள்**

## <u>தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை படிப்படியாக குறையும்: வானிலை அறிவிப்பு</u>



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை குறைந்து மழை படிப்படியாக குறையும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. மேலும் இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கையின் தென்கிழக்கு பகுதிகளில் காற்று சுழற்சி தொடர்ந்து அதே இடத்தில் நீடிக்கிறது இதன் காரணமாக தமிழகத்தின் தெற்கு கடலோர பகுதிகளில் சில இடங்களில் மழை தொடர வாய்ப்புள்ளது. கடலோரப் பகுதிகளில் கிழக்கிலிருந்து ஈரப்பதம் மிக்க காற்று வீசும். எனினும் மற்ற பகுதிகளில் வரண்ட வானிலையே காணப்படும். தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை குறைந்து மழை படிப்படியாக குறையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>பவானிசாகர் அணையில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறப்பு</u>

பவானிசாகர் அணை, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம் ஆகியவற்றில் இருந்து செவ்வாய்க்கிழமை (டிச.23) முதல் தண்ணீர் திறக்கப்படும் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார். இதுகுறித்து, திங்கள் கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு: ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து காளிங்கராயன் வாய்க்கால் ஆயக்கட்டு நிலங்களுக்கு இரண்டாம் போக பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இதேபோன்று, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் இருந்து வலது, இடதுபுறக் கால்வாய்களில் இரண்டாம் போக பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடவும் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர் பெரிய

ஏரியில் இருந்து ஏரியின் கிழக்கு, மேற்கு பிரதான கால்வாய்களில் இரண்டாம் போக பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயி களிடம் இருந்து கோரிக்கைள் வந்துள்ளன. இதையேற்று, செவ்வாய்க் கிழமை முதல் (டிச. 23) தண்ணீர் திறந்து விடப்படுகிறது. பவானிசாகர் அணை திறப்பின் மூலம், 15 ஆயிரத்து 743 ஏக்கரும், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம் திறப்பால் 9 ஆயிரத்து 12 ஏக்கரும், பாரூர் பெரிய ஏரி திறப்பால் 2 ஆயிரத்து 396 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

## வேளாண் கருவிகள் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

அரசு மானியத்துடன் வேளாண் கருவிகளைப் பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம், வேளாண்மையில் இயந்திரமயமாக்கலை ஊக்கப்படுத்தும் வகையில், பெரம்பலூர் மாவட்டத்திற்கு 2014-15 ஆம் ஆண்டில் தானியம் கதிரடிக்கும் கருவிகள், 8 குதிரைத் திறனுக்கு குறைவான களை எடுக்கும் கருவிகள், விதைத்தெளிப்பான், இருபாலரும் இயக்கும் வகையிலான கருவிகள், இருசக்கர உழுவைக் கருவிகள், சுழல் கலப்பைகள், உழுவை இயந்திரம் மூலம் இயக்கப்படும் கருவிகள், தட்டை வெட்டும் கருவி, குழிதோண்டும் கருவி, வைக்கோல் கட்டும் கருவி உள்பட 90 வேளாண் கருவிகள் ரூ. 29.74 லட்சத்தில் அரசு மானியத்துடன் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் சிறு, குறு, பெண் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 40 சதவீத மானியத்திலும் வழங்கும் வகையில், 71 வேளாண் கருவிகளுக்கு ரூ. 23.61 லட்சமும், தாழ்த்தப்பட்ட, பழங்குடியின விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வழங்கும் வகையில் 19 வேளாண் கருவிகளுக்கு ரூ. 6.13 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்

பயன்பெற விரும்பும் விவசாயிகள் விண்ணப்பத்துடன் கணினி சிட்டா, அடங்கல், அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் 2, வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட சிறு, குறு விவசாயி சான்று, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினத்தவராக இருந்தால் அதற்கான சான்று, துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி ஆகிய ஆவணங்களுடன் உதவி செயற்பொறியாளர், பள்ளிவாசல் தெரு, துறைமங்கலம் முகவரியில் உள்ள அலுவலகத்தில் விண்ணப்பத்தை சமர்ப்பித்து, முன்னுரிமை அடிப்படையில் தங்களுக்கு தேவைப்படும் வேளாண் கருவிகளை பெற்று பயன்பெறலாம்.

## <u>பெரம்பலூரில் நாளைவிவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் புதன்கிழமை (டிச. 24) காலை 10 மணியளவில், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்பாசனம், வேளாண் கடனுதவிகள், வேளாண் இடு பொருள்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படும். எனவே, இந்தக் கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவித்துப் பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## <u>காலிங்கராயனில் நீர் திறப்புக்கு வரவேற்பு! நெல் சாகுபடிக்கு அதிக வாய்ப்பு</u>

ஈரோடு : காலிங்கராயன் வாய்க்காலில், இரண்டாம் போகத்துக்கு தண்ணீர் திறப்பு அறிவிப்பால், விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர். பவானிசாகர் அணையில் இருந்து, பவானி ஆறு வழியே காலிங்கராயன் அணைகட்டுக்கு நீர் திறக்கப்படுகிறது. 56 மைல் நீளமுடைய இந்த வாய்க்கால் மூலம், 15,743 ஏக்கர் பாசனம் பெறுகிறது.நெல், கரும்பு, வாழை, மஞ்சள் பயிரையே, விவசாயிகள் அதிகம் பயிரிடுகின்றனர். குறிப்பாக மஞ்சள், கரும்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக் கின்றனர்.ஆண்டுதோறும் ஜூன், 16 முதல் ஏப்ரல், 30ம் தேதி வரை தண்ணீர் திறக்கப்பட வேண்டும். இந்தாண்டு அணையில் போதிய நீர் இருப்பு இன்றி, ஜூலை, 21ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. கான்கிரீட் தளம் அமைக்கும் பணிக்காக, கடந்த சில ஆண்டுகளாக முதல் போகத்துக்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டது. இதுவரை, 9.7 மைல் வரை, 90 கோடி ரூபாயில் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டுள்ளது. வெண்டிபாளையம் வரை அதாவது, 15.3 மைல் வரை கான்கிரீட் தளம் அமைக்க வேண்டும். அணைகட்டில், 7.50 கோடி ரூபாயில் பணிகள், இந்தாண்டு மேற்கொள்ளப்படுகிறது. எனவே, வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி நடைபெறவில்லை.இந்தாண்டு நெல் தவிர கரும்பு, வாழை, மஞ்சளும் பயிரிடப்பட்டு இருந்தது. பயிரை காப்பாற்ற தண்ணீர் திறக்க வேண்டும்.இரண்டாம் போகத்தில் நெல் விளைவிக்க தண்ணீர் விட வேண்டும் என்று, காலிங்கராயன் பாசன சபையினர், விவசாயிகள் நேரடியாக பொதுப்பணித்துறை, கலெக்டர் மூலம் அரசுக்கு கோரிக்கை வைத்தனர். அணையில் நீர் இருப்பு நிலை குறித்து ஆராயப் பட்டது. இரண்டாம் போகத்துக்கு, 22ம் தேதி முதல் தண்ணீர் திறக்க, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. எத்தனை நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படும். எத்தனை கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படும் என்பது குறித்த விபரங்கள் அரசாணையில் இடம் பெறவில்லை. காலிங்கராயன் பாசனத்துக்கு பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும்

என்று மட்டுமே, முதல்வர் பன்னீர்செல்வத்தின் உத்தரவு வந்துள்ளது. நீர் வினியோக காலம், விடப்பட வேண்டிய கன அடியின் அளவு உள்ளிட்ட விபரங்கள் விரைவில் வரும் என்று, அரசு அதிகாரிகள் எதிர் பார்க்கின்றனர். இதற்கிடையே ஏப்., இறுதி வரை தண்ணீர் திறக்கப்படும் என்று விவசாயிகள் எதிர்பார்ப்பில், நெல்லை நடவு செய்ய முன் வந்துள்ளனர்.சில விவசாயிகள் குறுகிய நாட்கள் மட்டுமே தண்ணீர் திறக்கப்பட கூடும் என்பதால், மக்காசோள பயிரை நடவு செய்ய, ஏற்பாடுகளை தீவிரமாக்கி உள்ளனர்.இந்நிலையில், தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஸ்திரமான அறிவிப்பாக இல்லாததால், நெல்லுக்கு தண்ணீர் முழுமையாக கிடைக்குமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. ஏப்., இறுதி வரை நீர் வினியோகிக்கப்படும் என்று அரசு அலுவலர்கள் தெரிவித்ததாக, பாசன சபை நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். காலிங்கராயன் பாசன சபை தலைவர் வேலாயுதம் கூறும் போது, காலிங்கராயனில் தண்ணீர் திறந்து விட்டதற்கு அரசு, மாவட்ட நிர்வாகம், பொதுப்பணித்துறைக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

## இலவச ஆடுகள் வழங்கல்

பெருந்துறை : பெருந்துறை சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட திருவாச்சி, சுள்ளிபாளையம், தோரணவாவி ஆகிய பஞ்சாயத்துக்களில், இலவச ஆடுகள் வழங்கும் விழா நடந்தது. கலெக்டர் பிரபாகர் தலைமை வகித்தார். சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், 150 பயனாளிகளுக்கு, 19.80 லட்சம் மதிப்பிலான, 600 இலவச ஆடுகளை வழங்கி பேசியாதவது: கிராமப்புற பெண்களின் வேலைப்பளுவை குறைத்திட, அரசு மூலம் இலவச மிக்ஸி, கிரைண்டர் மற்றும் ஃபேன் வழங்கப்படுகிறது. ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில், அரசால் தரமான, 20 கிலோ இலவச அரிசி வழங்கப்படுகிறது. கல்வியில், தமிழகம் வளர்ச்சி பெறுவதற்கு, கல்வித்துறைக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு

செய்து, மாணவ, மாணவியருக்கு தேவையான பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகிறது, என்றார்.கால்நடை பராமரிப்புத்துறை ஈரோடு மண்டல இணை இயக்குனர் ஜெயராமன், பெருந்துறை யூனியன் தலைவர் பெரியசாமி, துணைத்தலைவர் விஜயன், வெட்டையன்கிணறு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் திங்களூர் கந்தசாமி, மாவட்ட பஞ்., கவுன்சிலர் சாமிநாதன், பஞ்., தலைவர்கள் திருவாச்சி பேபிஉமா, சுள்ளிபாளையம் வசந்தாமணிசண்முகம், தோரணவாவி பார்வதிராஜன், திங்களூர் கீதாவேலாயுதம் உட்பட பலர் பங்கேற்றனர்.

## சிறுவிவசாயிகள் கூட்டம்

ஊட்டி : நீலகிரி மாவட்ட "நெலிகோலு' குறு, சிறு விவசாயிகள் மேம்பாட்டு சங்கத்தின் தலைவர் ராமன் தலைமையில், ஊட்டியில் கூட்டம் நடந்தது. இதில், பசுந்தேயிலைக்கு, கிலோவுக்கு, 25 ரூபாய்க்கு குறைவாக விலை கிடைப்பதற்குரிய நடவடிக்கையை சட்டப்பூர்வமாக மேற்கொள்வது; சென்னை ஐகோர்ட் தீர்ப்பின் படி, அரசால் நியமிக்கப்பட்ட மாவட்ட விலை நிர்ணய குழுவின் செயல்பாடுகளை துவக்க முயற்சி மேற்கொள்வது என்பன உட்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்க முன்னாள் தலைவர் சிவன், "நெலிகோலு' அறக்கட்டளை தலைவர் தர்மன் உட்பட பலர் பங்கேற்றனர். சங்க செயலர் கென்னடி நன்றி கூறினார்.

## ஜனவரியில் விஞ்ஞானி மாநாடு; நாமக்கல் மாணவர்கள் பங்கேற்பு

நாமக்கல் : குஜராத் மாநிலத்தில், ஜனவரி 6ம் தேதி துவங்கும், தேசிய அளவிலான இளம் சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் மாநாட்டில், நாமக்கல்லில் இருந்து, இரண்டு மாணவர்கள் பங்கேற்கின்றனர். கலை பண்பாட்டு துறை மூலம், ஜவகர் பாலபவன், நாமக்கல்லில் செயல்பட்டு வருகிறது. டில்லியில் உள்ள தேசிய பால்பவன் சார்பில், ஜனவரி, 6 முதல், 12ம் தேதி வரை, குஜராத் மாநிலம், சூனாகாட் பால்பவனில்,

தேசிய அளவிலான இளம் சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் மாநாடு நடக்கிறது.நாமக்கல் மாவட்டத்தில் இருந்து, கவிமயில், மோசி டேனியல் தேவசகாயம் ஆகிய, இரண்டு மாணவர்கள், மாநாட்டில் பங்கேற்க தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த மாணவர்கள், நாமக்கல் மாவட்டத்தில், பாரம்பரிய நீர் மேலாண்மை, வனப்பாதுகாப்பு மற்றும் வீட்டு வைத்திய முறைகள் குறித்து ஆய்வு கட்டுரைகளை, ஃபோட்டோ வுடன் சமர்ப்பிக்கின்றனர். அவர்களுக்கு பாதுகாவலராக, மாடல் பள்ளி முதல்வர் சார்லிகேத்தரின் உடன் செல்கிறார். ஏற்பாடுகளை, ஜவஹர் சிறுவர் மன்றத்தின் திட்ட இயக்குனர் தில்லை சிவக்குமார் செய்துள்ளார்.

**நாமக்கல் சங்கத்தில் ரூ. 1 கோடிக்கு பருத்தி வர்த்தகம்**

ராசிபுரம் : நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, ஒரு கோடி ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 7,024 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,960, குறைந்தபட்சமாக, 4,595 ரூபாய், ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,595, குறைந்த பட்சமாக, 4,019 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக ஒரு கோடி ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 2வது சீசன் மலர்கண்காட்சி ஏற்காட்டில் ஏற்பாடுகள் தீவிரம்

ஏற்காடு, : ஏற்காட்டில் வரும் 26ம் தேதி 2வது சீசன் மலர் கண்காட்சி தொடங்கு கிறது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகிறது. சேலம் மாவட்டம் ஏற்காட்டில் ஆண்டுதோறும் கோடைக்காலம் மட்டு மின்றி டிசம்பர் மற்றும் ஜன வரி மாதங்களில் குளிரையும் பொருட்படுத் தாமல் ஏரா ளமான சுற்றுலா பயணிகள் குவிகின்றனர். இதை 2வது சீசனாக கருதி சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் பல்வேறு நிகழ்ச்சி களுக்கும் ஏற்பாடு செய்து வருகிறது. இந்தாண்டு 2வது சீசனையொட்டி வரும் 26, 27ம் தேதி மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை தோட்டக் கலைத் துறையினர் தீவிரமாக செய்து வருகின்றனர். மலர்கண்காட்சி நடை பெறும் அண்ணாபூங்காவில் 3000ஆயிரத்திற்கும் மேற்பட்ட பூந்தொட்டி களில் பலவகை மலர் செடி களை வைத்து அழகுப்படுத் தும் பணி நடந்து வருகிறது. மேலும் சுற்றுலா பயணி கள் வசதிக்காக குடிநீர், கழிப்பிடம் வசதிகளை செய் வதற்கும் மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது. வாட்டி எடுக்கும் குளிர்: ஏற்காட்டில் எப்போதும் இல்லாத அளவிற்கு கடுமை யான பனிப்பொழிவு காணப்படுகிறது. நண்பகல் வரையிலும் பனி மூட்டம் நிலவி வருகிறது. அதிகாலையில் எதிரில் வருபவர்களை பார்க்க முடியாத அளவிற்கு பனி மூட்டம் உள்ளது. ஏற்காடு ஏரி, அண்ணா பூங்கா, தாவரவியல் பூங்கா, பக்கோடா பாய்ண்ட், லேடீஸ் சீட், ஜென்ஸ் சீட் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் வெண்மையான போர்வை போர்த்தியது போல், பனி படர்ந்து காணப்படுகிறது. மலர்களின்

மீது படிந்துள்ள நீர்த்துளி ரம்மியமாக காட்சி அளிக்கிறது.

**சிறு தானியங்களில் மதிப்பு கூட்டுதல் பயிற்சி சுயதொழில் முனைவோருக்கு**

தர்மபுரி, : பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையம் சார் பில், சுய தொழில் முனைவோருக்கு சிறு தானியங்களில் மதிப்பு கூட்டுதல் பயிற்சி துவங்க உள்ளது. இது குறித்து திட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை: மாநில உணவு பதப்படுத்தும் இயக்கம் மூலம், தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையம் சார் பில், சுயதொழில் முனை வோர் பயிற்சியில் சிறு தா னியங்களில் மதிப்பு கூட் டுதல் பயிற்சி வரும் ஜனவரி மாதம் துவங்க உள்ளது. இதில் சிறுதானியங்களின் முக்கியத்துவம், தொழில் முனைவோரின் தகுதிகள், கணக்கு பதிவேடுகள் பராமரிப்பு, சிறுதானியங்களில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு மற்றும் அவற்றின் செயல் முறை விளக்கம் ஆகியன பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மேலும் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு சென்று நேரடி பயிற்சியும் அளிக்கப் படுகிறது. இப்பயிற்சியில் கலந்து கொள்ள குறைந்த பட்சம் பிளஸ்2 படித்திருக்க வேண் டும். ஆர்வமுள்ள விவசாயிகள், இளைஞர்கள் பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தை 04342-245860 என்ற தொ லைபேசி மூலம் தொடர்பு கொண்டு பயிற் சிக்கு விண்ணப்பிக்கலாம். இவ்வாறு திட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழ்செல் வன் தெரிவித்துள்ளார்.

**கரூர் மாவட்டத்தில் சராசரி மழையால் சம்பா சாகுபடி பணி மும்முரம்**

கரூர், : கரூர் மாவட்டத்தில் சராசரி மழைஅளவு பெய்துள்ளதால் விவசாயிகள் சம்பா சாகுபடி பணியில் ஈடுபட்டுள்ளனர். கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.2 மி.மீட்டராகும். அக்டோபர் மாதம் முடிய கிடைக்க வேண்டிய சராசரி மழையான 493.7

மிமீக்கு நடப்பு மாதம் வரை 298.2 மிமீ மழை மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளது. அதாவது சராசரி மழை அளவைக் காட்டிலும் 40 சதவீதம் குறைவாகவே பெய்துள்ளது. தென்மேற்கு பருவமழை மாவட்டத்தில் 209.5மிமீ பெய்தது. வடகிழக்கு பருவ மழையை பொறுத்தளவில் சராசரி அளவு 341.8 மிமீ. ஆனால் மிகக்குறைந்த அளவுக்கே மழைபொழிவு இருந்தது. கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் நல்ல மழை பெய்தது. அக்டோபர் மாதம் கடைசி 10 நாட்களில் பெய்த மழைதான் இப்பருவத்தில் பெய்த அதிகபட்ச மழையாகும். 101.22 மிமீ மழைபொழிந்து அளவை உயர்த்தியது. வடகிழக்கு பருவமழையின் சராசரியில் மூன்றில் ஒரு பங்கு மழையானது இந்த 10 நாட்களிலேயே பெய்துள்ளது. கரூர் மாவட்டத்தில் கரூர், அரவக்குறிச்சி, க.பரமத்தி, குளித்தலை, மாயனூர், அணைப்பாளையம், பஞ்சப்பட்டி, தோகமலை, பாலவிடுதி, கடவூர், கிருஷ்ணராயபுரம், மயிலம்பட்டி ஆகிய 12 இடங்களில் மழை அளவு எடுத்து மாவட்டத்தில் சராசரியாக பெய்த மழை கணக்கிடப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் பரவலாக மழை பெய்ததை தொடர்ந்து சாகுபடி பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நெல், கரும்பு, வாழை மற்றும் பயறு வகைகள் அதிக விளைச்சல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கரூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு சராசரி மழை அளவை விட 15 சதம் மட்டுமே குறைவான மழை பெய்துள்ளது. வடகிழக்கு பருவமழை கைகொடுத்ததால் மழைஅளவு உயர்ந்தது. சிறு தானியம், பயறு வகைகள், எண்ணை வித்துப்பயிர்கள் 35, 218எக்டேரில் மானாவாரி பயிராக சாகுபடி செய்யப்பட்டு பயிர்கள் அறுவடை நிலையில் இருப்பதாக வேளாண் துறையினர் தெரிவித்தனர். சம்பா பருவ நெல் சாகுபடியானது 12,443 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு வளர்ச்சி பருவத்தில் இருக்கிறது. வேளாண்மை பொறியியல் துறையில் தேசிய

வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் வேளாண் கருவிகள் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

**<u>அரியலூரில் 24ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>**

அரியலூர், : அரியலூர் கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அரியலூர் கலெக்டர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் கூட்ட மன்றத்தில் வரும் 24ம்தேதி காலை 10 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற இருக்கிறது. அதுசமயம் நடைபெறுகின்ற இக்கூட்டத்தில் வேளாண் சம்பந்தமாக நீர்பாசனம், வேளாண் சம்பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண் இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்களுடன் விவாதிக்கப்படும். எனவே அன்றைய தினம் விவசாய சங்க பிரதிநிதிகள் தவறாமல் கலந்துகொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

**<u>கடைமடை பகுதியில் ஏரி, குளங்கள் நிரம்பியதால் நடவுப்பணிகள் துவக்கம்</u>**

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதியில் 3 ஆண்டுகளுக்கு பிறகு பெய்த பலத்த மழையால் ஏரி, குளங்கள் நிரம்பியது. இதனால் விவசாயிகள் நடவு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். தஞ்சை மாவட்டம் கடைமடை பகுதியில் கடந்த 3 ஆண்டுகளாக மழையின்றி ஏரி, குளங்கள் நிரம்பாமல் நிலங்கள் அனைத்தும் சாகுபடியின்றி தரிசாக கிடந்தது. இந்தாண்டு கடந்த செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்த மழையில் 1,000 ஏக்கருக்குமேல் பாசனம் தரக்கூடிய நாடியம், ஊமத்தநாடு, விளங்குளம், சோலைக்காடு, பெருமகளூர், கொரட்டூர், ரெட்டவயல் போன்ற பெரிய ஏரிகள் முழு கொள்ளளவை எட்டவில்லை. இருப்பினும் விவசாயிகள்

நாற்றுவிடும் பணிகளை முடித்திருந்தனர். ஒரு சில விவசாயிகள் நேரடி விதைப்பு செய்திருந்தனர். சாகுபடி நடைபெறுமா என்ற கவலையுடன் இருந்த ஏரி பாசன விவசாயிகளுக்கு கடந்த 3 நாட்களாக பெய்த பலத்த மழையில் அனைத்து ஏரிகளும் நிரம்பி வடிகால்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்நிலையில் கடைமடை விவசாயிகள் உடனடியாக நடவு பணிகளை துவக்கியுள்ளனர். நேரடி விதைப்பு செய்திருந்த விவசாயிகள் களை எடுக்கும் பணிகளில் ஈடுபட்டு உரமிடும் பணிகளை செய்து வருகின்றனர்.

**<u>நீடாமங்கலம் வட்டாரத்தில் சம்பா, தாளடி பயிர்களில் கூண்டு,இலை சுருட்டுப் புழு கட்டுப்படுத்த வேளாண் அதிகாரிகள் வழிகாட்டல்</u>**

நீடாமங்கலம்,:நீடாமங்கலம் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா மற்றும் தாளடி பயிர்களை பார்வையிட்ட வேளாண் அதிகாரிகள் சில இடங்களில் காணப்படும் கூண்டு மற்றும் இலை சுருட்டுப் புழு தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு ஆலோ சனை வழங்கியுள்ளனர். நீடாமங்கலம் வட்டாரத்தில் 48,270 ஏக்கரில் சம்பா மற்றும் தாளடி நெற் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலும் சி.ஆர்.1009,பிபிடி 5204, எம்.டி.யு 7029,ஆடுதுறை 39,46 ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பயிர்களில் பூச்சி நோய் தாக்குதல் குறித்து ஆய்வு செய்ய வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர். முனைவர்.சோழன், நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் ஆகியோர் புள்ளவராயன் குடிகாடு, வடுவூர் வடபாதி, எடமேலையூர், காஞ்சிகுடிகாடு கிராமங்களில் ஆய்வு செய்தனர். பொதுவாக சம்பா மற்றும் தாளடி நெற்பயிர்கள் நல்ல முறையில் இருக்கிறது. இளம் தாளடி பயிரில் கூண்டுபுழு மற்றும் இலைபேன் காணப்படுகிறது. சில இடங்களில் இலைசுருட்டு புழு, புகையான் நோய் தாக்குதல் காணப்படுகிறது. இதில் நன்மை செய்யும் பூச்சிகள் அதிக அளவில் உள்ளது. இலை சுருட்டுப்புழு காணப்படும் இடங்களில்

ஏக்கருக்கு புரபனோபாஸ் 400மிலி அல்லது குளோரிபைரிபாஸ் 600மிலி அல்லது பேசிலஸ் துரிஞ்சியான்ஸிஸ் 400 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கை தெளிப்பானில் தெளிக்கவும். புகையானை கட்டுப்படுத்த ஏக்கருக்கு தயோமிதாக்ஸிம் 40 கிராம் அல்லது இமிடாகுளோபிரிட் 80மிலி அல்லது பியூப்ரோபெசின் 320மிலி அல்லது அசார்டிராக்டின் 200மிலி இவற்றில் ஏதாவது ஒரு மருந்தை 200லிட்டர் தண்ணீரில் கலந்து து£ரின் அடியில் படும்படி தெளிக் கவும். இளம் தாளடி நெல் பயிரில் காணப்படும் இலைப்பேனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு பாஸ்போமிடான் 240 மிலி அல்லது தயோமிதாக்ஸிம் 40கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.நன்மை செய்யும் பூச்சிகள் அதிகம் காணப்படும் இடங்களில் பூச்சிகொல்லி மருந்து அடிப்பதையும், தேவைக்கு அதிகம் யூரியா இடுவதை தவிர்க்கவும். இந்த பரிந்துரைகளை கடைபிடித்து நெல் பயிர்களை பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் இருந்து கட்டுப்படுத்தி அதிக மகசூல் எடுக்கலாம் என நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் தெரிவித்தார்.

## <u>தை பொங்கலுக்கு சின்னமனூர் செங்கரும்பு அறுவடைக்கு தயார்</u>

சின்னமனூர், : தமிழர் திருநாளை இனிப்பாக சொல்லும் தை பொங்கல் ஸ்பெஷல் செங்கரும்பு சின்னமனூர் பகுதியில் விளைந்து அறுவடைக்கு தயாராக நிற்கிறது. தேனி மாவட்டத்தில் முல்லைப்பெரியாற்றின் பாசனத்தால் வருடத்தில் 2 போகம் நெல்நடவு கம்பம் பள்ளத்தாக்கில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நடந்து வருகின்றது. கரும்பு விவசாயமும் அதிகளவில் நடக்கிறது. சின்னமனூர் மார்க்கயன்கோட்டை சாலையிலிருந்து துவங்கி தேனி சாலையிலுள்ள கண்ணம்மாள்கோயில் வரையில் சுமார் 150 ஏக்கரில் 10 மாத பயிரான செங்கரும்பு நடவு செய்யப்பட்டது. விவசாயிகள் நெல் போக அந்த வயல்வெளிகளில் ஒரு புறம் ஏக்கருக்கு 17 ஆயிரம் கரும்பு கருணைகள் நடவு செய்தனர். உடனடியாக களைக்கொல்லி மருந்து அடிக்கப்படுகிறது. 30வது நாளில்

கடலப் புண்ணாக்கு, வேப்பம்புண்ணாக்கு, யூரியா ஆகியவை பாக்டம்பாஸூடன் கலந்து தெளித்து இளம் பயிரை வளர்க்கின்றனர். பின்னர் 3 மாதத்திற்கு ஒரு முறை அதே கலவை மருந்தை இருமுறை தெளித்து 10 மாதக்கரும்பை வளர்த்து தயார் நிலையில் வைத்துள்ளனர். களையெடுப்புடன் ஏக்கருக்கு ரூ.1.50 லட்சம் செலவு செய்துள்ளனர். கரும்பு நடவின் துவக்கத்தில் சரிவர மழை இல்லாததால் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. அறுவடை நெருங்குவதற்கு 3 மாதத்திற்கு முன்பாக நல்ல மழை பெய்ததால் நோய்கள் நீங்கி கரும்பு வளர்ந்துள்ளது. நல்ல பருவத்தில் பருவமழை பெய்யாததால் உற்பத்தி குறைந்துள்ளது. எனினும் 7 அடி முதல் 10 அடி வரையில் நல்ல உயரத்தை அடைந்து அறுவடைக்கு தயாராக இருக்கிறது. முன்னதாக ஒரு சில விவசாயிகள் கரும்பு அறுவடையை துவக்கியிருப்பதால் சபரிமலை ஐய்யப்பன்கோயிலுக்கு செல்கின்ற பக்தர்கள் சின்னமனூரில் வண்டியை நிறுத்தி கரும்பை கட்டாக வாங்கி சுவைத்து செல்கின்றனர். கடந்த வருடத்தை காட்டிலும் இவ்வாண்டு உற்பத்தி குறைவாக இருப்பதால் 10 கரும்புகள் கொண்ட கட்டு ரூ.150 முதல் 200க்குள் விற்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சின்னமனூர் விவசாயி மகராஜன் கூறுகையில், தைப்பொங்கல் என்றாலே சின்னமனூர் செங்கரும்புக்குக்குத்தான் மவுசு அதிகரிக்கும். கரும்பு நீண்டதாகவும், தடிமனாகவும், சுவையாகவும் இருப்பதால் வாங்குவதற்கு வியாபாரிகள் குவிகின்றனர். ஏக்கருக்கு ஒன்னரை லட்சம் செல்வு செய்து வளர்த்துள்ளோம். சரிவர மழை பெய்யாததால் உற்பத்தி குறைவாக இருக்கிறது. தேவை அதிகம் இருப்பதால் திடீரென்று விலை உயர்ந்து விடலாம் என்ற நிலை உள்ளது. மொத்த விலையாக 10 கரும்பு கட்டு ரூ.150 என விலை நிர்ணயம் செய்துள்ளோம். ஒரு கரும்பு சில்லரைக்கு ரூ.25 முதல் 30வரை விற்கிறது என்றார்.

**<u>இயற்கை விவசாய பொருட்களை சந்தைப்படுத்த சான்று பெறவேண்டும் விதைச்சான்று அதிகாரி வலியுறுத்தல்</u>**

நாகர்கோவில், : இயற்கை விவசாயம் மூலம் விளைவிக்கப்படும் பொருட்களை சந்தைப் படுத்த சான்று பெற வேண்டியது அவசியம் என விதைச்சான்று அதிகாரி தெரிவித்துள்ளார். கன்னியாகுமரி விதைச்சான்று உதவி இயக்குநர் குணபாலன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது: தமிழகத்தில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு தட்டுபாடின்றி உணவு கிடைத்திடவும், வருமானத்தை பெருக்கிடவும் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர். அதிக வேளாண் உற்பத்திக்கும் நிலையான வேளாண்மைக் கும் ரசாயன வேளாண்மை சரியான தீர்வாக இருக்க முடியாது என்பதை விவசாயிகள் நன்கு உணர்ந்துள்ளனர். மிக முக்கியமாக நமது இந்திய உணவுபொருட் களில் அதிகமான அளவில் பூச்சிகொல்லி, நச்சு கலந்திருப்பதால் ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகள் நமது நாட்டு உணவு பொருட்களை இறக்குமதி செய்ய தயங்குகின்றனர். அவர்கள் இறக்குமதி செய்யும் உணவு பொருட்கள் இயற்கையான முறையில் உற்பத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றனர். மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களாலும், மக்களிடையே ஏற்பட்டுள்ள உடல் ஆரோக்கியம் சார்ந்த விழிப்புணர்வாலும் இன்று இயற்கை வேளாண்மைக்கு விவசாயிகள் மாறத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு இயற்கை வேளாண்மை செய்ய விரும்பும் விவசாயிகள் தமது வேளாண்பொருட்களை உரிய முறையில் சந்தைப்படுத்த அங்கக சான்று துறையில் சான்று பெறுவது அத்தியாவசியமாக உள்ளது. தமிழ்நாட்டில் அங்கக சான்றளிப்பு மத்திய அரசின் தேசிய அங்கக வேளாண்மை செயல்திட்டத்தின் படியும், அபீடா நிறுவன வழிகாட்டுதல் மற்றும் அங்கீகாரத்தின் மூலமும் மே 2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அங்கக சான்று பெற இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டுள்ளோர் தனி நபராகவோ, குழுவாகவோ பெரு வணிக

நிறுவனங் களாகவோ பதிவு செய்து கொள்ளலாம். கால்நடை பராமரிப்பு, தேனீ வளர்ப்பு, வனப்பொருட்கள் சேகரிப்பு செய்வோரும் இதில் பதிவுசெய்துகொள்ளலாம். மேலும் அங்கக விளைபொருட்களை பதப்படுத்துவோரும், அங்கக இடுபொருட்கள் உற்பத்தி செய் வோரும், வணிகம் மற்றும் ஏற்றுமதி செய் வோரும் உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்யலாம்.

கடைபிடிக்கவேண்டியவழிமுறைகள்:

*தேசிய அங்கக உற்பத்தி திட்டத்தின் நெறிமுறைகளுக்கு உட்பட்டு அங்கக முறைப்படி, இயற்கை வேளாண்மை முறைப்படி சாகுபடி மேற்கொள்ளப்படவேண்டும்.

*ரசாயன உரங்கள், பூச்சிகொல்லி மருந்துகள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள், மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள், ரசாயன நேர்த்தி செய்த விதைகள் எக்காரணம் கொண்டும் பயன்படுத்தக்கூடாது.

* அங்கக சான்றளிப்பிற்கு மாறும் காலம் கடைபிடிக்கப்படவேண்டும்.

* பயிர் சுழற்சியில் பயறு வகைப்பயிர்கள் சேர்க்கப்படவேண்டும்.

* மண் அரிமான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

*கால்நடைகள் பண்ணையிலேயே பராமரிக்கப்படவேண்டும்.

*அங்கக விளைபொருட் கள் சேமிக்கும் இடங்கள் தனிமையாகவும், சுத்தமாகவும்பராமரிக்கப்படவேண்டும்.

* அங்கக பொருட்களின் கொள்கலன்களை எளிதில் மக்கும் பொருட்களால்தயார்செய்யவேண்டும்.

* அங்கக பொருட்களின் கொள்கலனில் பொருட்களின் முழு விவரங்கள் குறிக்கப்பட்டிருக்கவேண்டும்.

*அங்கக சான்று பண்ணைகளில் உரிய ஆவணங்கள் பராமரிக்கப்படவேண்டும். இவ்வாறு விதிமுறை களை பின்பற்றி இயற்கை சார்ந்த நஞ்சில்லா விளை பொருட்களை உற்பத்தி செய்து

சான்று பெற்று அதிக லாபம் பெறலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தும்பலஅள்ளி அணைக்கு கொண்டு வரும் திட்டத்திற்கு ரூ.30 லட்சம் ஒதுக்கீடு டாக்டர் அன்புமணி ராமதாஸ் எம்.பி. பேட்டி**



பாலக்கோடு, குமாரசெட்டி ஏரியில் இருந்து வெளியேறும் தண்ணீரை தும்பலஅள்ளி அணைக்கு கொண்டு வரும் திட்டத்திற்கு ரூ.30 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளதாக டாக் டர் அன்புமணி ராமதாஸ் எம்.பி. பேட்டி அளித்தார்.

ஏரியில்ஆய்வு

தர்மபுரி மாவட்டம் மாரண் டஅள்ளி அருகே உள்ள குமார செட்டி ஏரி மற்றும் அதன் கால்வாய் பகுதிகளை டாக் டர் அன்புமணி ராமதாஸ் எம்.பி. நேற்று நேரில் பார்வை யிட்டார். பின்னர் அவர் விவசாயிகள், பொதுமக்களி டம் குறைகளை கேட்டறிந்தார். இந்த ஏரிக்கு வரும் கால் வாய்களை தூர் வார நட வடிக்கை எடுக்க வேண்டும். மழைக்காலங்களில் ஏரிக்கு தண்ணீர் வருவதற்கான வழித் தடங்களை கண்டறிந்து அங் குள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்று விவ சாயிகள் அவரிடம் கோரிக்கை விடுத்தனர். பின்னர் டாக்டர் அன்பு மணி ராமதாஸ் எம்.பி. நிருபர் களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- தர்மபுரி மாவட்டம் மாரண்டஅள்ளி பகுதியில் சமீபத்தில் அதிகளவில் பெய்த மழையை அடுத்து குமார செட்டி ஏரி உடைந்து தண்ணீர் வீணாக காவிரியாற்றில் கலந் துள்ளது. தர்மபுரி மாவட்டத் தில் பெய்யும் மழை

ஒரு துளி கூட வீணாகாமல் இந்த மாவட்ட விவசாயிகள் பயன் படுத்த வேண்டும்என்றுமக்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

ரூ.30லட்சம்ஒதுக்கீடு

பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று முதற் கட்டமாக குமாரசெட்டி ஏரி யில் இருந்து வெளியேறும் தண்ணீரை கல்லாகரம், மாரண்ட அள்ளி, ஜெர்தலாவ் ஏரி, தூள்செட்டி ஏரி வழியாக தும்பல அள்ளி அணைக்கு கொண்டு சென் றால் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த 6 ஒன்றியங்கள் பயன்பெறும். இதன் மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். ஆனால் தற்போது தண்ணீர் சின்னாறு வழியாக சென்று வீணாக ஒகேனக்கல் காவிரி யாற்றில் கலக்கிறது. ஆகவே குமாரசெட்டி ஏரியில் இருந்து வீணாக வெளியேறும் தண் ணீரை தும்பலஅள்ளி அணைக்கு கொண்டுவரும் திட்டத்தை நிறைவேற்ற பாரா ளுமன்ற உறுப்பினர் நிதியி லிருந்து முதற்கட்டமாக ரூ.30 லட்சம் ஒதுக்கீடு செய்துள் ளேன். இதற்கான கடிதத்தை மாவட்ட கலெக்டரிடம் விரை வில் வழங்க உள்ளேன். இந்த திட்டத்தை செயல் படுத்தினால் விவசாயிகள் மிகப்பெரிய அளவில் பயன டைவார்கள். என்னேகோல் அணையிலிருந்து 50 கிலோ மீட்டர் கால்வாய் வெட்டி தும்பலஅள்ளி அணைக்கு தணீர் கொண்டுவரும் திட் டத்தை அரசு உடனடியாக செயல் படுத்த வேண்டும். இவ்வாறு டாக்டர் அன்பு மணி ராமதாஸ் எம்.பி. கூறினார். அப்போது, மாநில துணைப் பொதுசெயலாளர் சரவணன், மாவட்ட செயலாளர்கள் சாந்தமூர்த்தி, அரசாங்கம், முன்னாள் எம்.எல்.ஏ. வேலு சாமி, மாநில வன்னியர் சங்க துணைத்தலைவர் பாடிசெல் வம் உள்பட பலர் உடனி ருந்தனர்.

## <u>அந்தியூர் ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.54 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை</u>

அந்தியூர், அந்தியூர் ஒழுங்குமுறைக்கூடத்தில் ரூ.54 லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை ஆனது.

விவசாய விளைபொருட்கள்

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு அந்தியூர், எண்ணமங்கலம், வெள்ளித்திருப்பூர், அத்தாணி, பர்கூர் ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் விவசாய விளைபொருட்களை கொண்டு வந்தனர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் முன்னிலையில் இந்த ஏலம் நடந்தது. தேங்காய்கள் மொத்தம் 22 ஆயிரம் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் சிறிய தேங்காய் ஒன்று 4 ரூபாய் 70 காசுக்கும், பெரிய தேங்காய் 14 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.2 லட்சத்துக்கு தேங்காய் விற்பனை ஆனது.

கொப்பரை தேங்காய்

கொப்பரை தேங்காய் 40 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டாலுக்கு ரூ.7ஆயிரத்து 515 முதல் ரூ.8 ஆயிரத்து 789 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.75 ஆயிரத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது. வெள்ளை எள் 600 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டாலுக்கு 7ஆயிரத்து 489 ரூபாய் முதல் 10 ஆயிரத்து 69 ரூபாய் வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.36 லட்சத்துக்கு எள் விற்பனை ஆனது. மக்காச்சோளம் 40 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டாலுக்கு ரூ.1,089 முதல் ரூ.1,180 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.40ஆயிரத்துக்கு மக்காச்சோளம் விற்பனை ஆனது.

ரூ.54 லட்சத்துக்கு விற்பனை

நிலக்கடலை 1,800 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் (காய்ந்தது) குவிண்டாலுக்கு ரூ.3 ஆயிரத்து 421 முதல் ரூ.4 ஆயிரத்து 200 வரை ஏலம் போனது. நிலக்கடலை (பச்சை) குவிண்டாலுக்கு ரூ.1,701 முதல் ரூ.2 ஆயிரத்து 500 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.15 லட்சத்துக்கு நிலக்கடலை விற்பனை ஆனது. இந்த ஏலத்தில் விவசாய

விளைபொருட்கள் மொத்தம் 54 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆனது. கர்நாடக மாநிலம் மைசூர், மேட்டுப்பாளையம், தர்மபுரி, திருப்பூர், விருதுநகர், தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் விவசாய விளைபொருட்களை ஏலம் எடுத்தனர்.

**அமராவதி ஆற்றின் ராஜவாய்க்கால் பிரிவில் இருந்து செல்லும் மகரந்த வாய்க்காலை கலெக்டர் ஜெயந்தி ஆய்வு**



அமராவதி ஆற்றின் ராஜ வாய்க்கால் பிரிவில் இருந்து செல்லும் மகரந்த வாய்க்காலை கலெக்டர் ஜெயந்தி ஆய்வு செய்தார். கலெக்டர்ஆய்வு

கரூர் மாவட்டம், புலியூர் பேரூராட்சிக்குட்பட்ட புரவிபாளையம் பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு அமராவதி ஆற்றின் ராஜ வாய்க்கால் பிரிவில் இருந்து மகரந்த வாய்கால் வழியாக தண்ணீர் செல்லும் வழியில் ஒரு சில இடங்களில் கழிவுப் பொருட்கள் அடைப்பின் காரணமாக தண்ணீர் தேங்கி நின்று செல்வதாக கரூர் மாவட்ட கலெக் டர் ஜெயந்திக்கு தகவல் வந்தது. அதன் பேரில் கலெக்டர் ஜெயந்தி சம்பந்தப்பட்ட இடத்திற்கு சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். கண்காணிக்கவேண்டும். தண்ணீர் செல்லும் பாலத்தின் கீழ் பகுதியில் நகராட்சி பயன்பாட்டிற்கும், பேரூராட்சி பயன்பாட்டிற்கும் செல்லும் தண்ணீர் குழாய்கள் பொருத்தப் பட்டுள்ளதை பார்வையிட்ட கலெக்டர், இந்த குழாய்களை மாற்று வழியில் கொண்டு செல்ல அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் தண்ணீர் செல்லும் கால்வாய் ஓரம் உள்ள விவசாயிகள் விவசாய பணியின் போது நிலத்தில் உள்ள புல் மற்றும் மரங்களை அப்புறப்படுத்தி கால்வாயில் போடக்கூடாது. அவ்வாறு செய்வதன் மூலம் கால்வாயில் தண்ணீர் சீராக செல்ல முடியாமல் தேங்கி நின்று விடுகிறது. எனவே கிராம நிர்வாக அலுவலர் அவ்வப்போது இந்த பகுதியை கண்காணித்து வருவதுடன் அமராவதி ஆற்றின் கண்காணிப்பு

அலுவலர்கள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரும் கண்காணித்து வரவேண்டும் என்று கலெக்டர் தெரிவித்தார். இந்த ஆய்வின்போது அமராவதி ஆறு செயற்பொறியாளர் சரவணன், உதவி பொறியாளர் ராஜா, தாசில்தார் மாதவன், பேரூராட்சி செயல் அலுவலர் ரவி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடன் சென்றனர்.

**<u>2318 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கப்படும் கலெக்டர் தகவல்</u>**



கிருஷ்ணகிரி அருகே உள்ள ராமாபுரத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ஆடுகளை, அவர்கள் எவ்வாறு வளர்த்து வருகிறார்கள் என்பதை கலெக்டர் டி.பி.ராஜேஷ் ஆய்வு செய்தபோது எடுத்தபடம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருகிற பிப்ரவரி மாத இறுதிக்குள் மேலும் 2,318 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கப்படும் என்று கலெக்டர் டி.பி.ராஜேஷ் தெரிவித்தார்.

நேரில்ஆய்வு

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழக முதல்-அமைச்சரின் சிறப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கறவை பசுக்கள் மற்றும் ஆடுகள் எவ்வாறு பராமரிக்கப்படுகிறது. அதன் மூலம் கிராம மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளதா? என்பது குறித்து ஆய்வு செய்வதற்காக மாவட்ட கலெக்டர் டி.பி.ராஜேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள் பல்வேறு கிராமங்களுக்கு நேரில் சென்று விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் பெற்ற பயனாளிகளிடம் விசாரணை நடத்தினர். பின்னர்கலெக்டர்டி.பி.ராஜேஷ்கூறியதாவது:-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் நவம்பர் மாதம் வரையில் மொத்தம் ரூ.4 கோடியே 5 லட்சம் மதிப்பிலான 1,150 கறவைப் பசுக்களும், ரூ.22 கோடியே 87 லட்சம் மதிப்பிலான 70 ஆயிரத்து 719 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் கறவைப் பசுக்கள்

மூலம் 1,011 கன்றுகளும், ஆடுகள் மூலம் 62 ஆயிரத்து 392 ஆட்டுக்குட்டிகளும் ஈன்றுள்ளன. கறவைப் பசுக்களில் இருந்து தினமும் 9 ஆயிரத்து 98 லட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. சிறப்பாக பராமரிப்பவர்களுக்கு பரிசு இந்த திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் தாங்கள் வளர்த்து வரும் கால்நடைகளை நன்கு பராமரித்து வாழ்வாதாரத்தை பெருக்கிக்கொள்ள வேண்டும். கால்நடைகளை சிறப்பாகப் பராமரிக்கும் பயனாளிகளுக்கு தமிழ் புத்தாண்டு தினத்தன்று பரிசுகள் வழங்கப்படும். வரும் பிப்ரவரி மாத இறுதிக்குள் மேலும் 250 பயனாளிகளுக்கு 250 கறவை பசுக்களும், 2,068 பயனாளிகளுக்கு 8 ஆயிரத்து 272 வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளும் வழங்கப்பட உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

## 24 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் அமைச்சர் ஜெயபால் வழங்கினார்



ராராந்திமங்கலத்தில் 24 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகளை அமைச்சர்ஜெயபால்வழங்கினார்.

வெள்ளாடுகள்வழங்கும்விழா

திருமருகல் ஒன்றியம் ராராந்திமங்கலத்தில் தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட வருவாய் அதிகாரி பெஞ்சமின்பாபு தலைமை தாங்கினார். தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் துணை தலைவர் ஆசைமணி, திருமருகல் ஒன்றியக்குழு துணை தலைவர் ராதாகிருட்டிணன், கால்நடைத்துறையின் மண்டல இணை இயக்குனர் நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் புஷ்பநாதன் வரவேற்றார். விழாவில் மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் கலந்து

கொண்டு 24 பயனாளிகளுக்கு வெள்ளாடுகளை வழங்கி பேசினார். அப்போதுஅவர்கூறியதாவது:-

இந்தியாவிலேயே தமிழக அரசு முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது. இதை மற்ற மாநிலங்கள் பின்பற்றி வருகின்றன. குறிப்பாக மழைநீர் சேகரிப்புத்திட்டம், ஏழை மற்றும் கணவரால் கைவிடப்பட்டோருக்கு வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்கில் விலையில்லா கறவைப்பசு, வெள்ளாடுகள் வழங்கப்படுகின்றன. இதற்கு கொட்டகை அமைக்கவும், இன்சூரன்ஸ் மற்றும் கறவைப்பசு, வெள்ளாடுகள் வாங்க போக்குவரத்து செலவு உள்ளிட்ட அனைத்தும் அரசே வழங்குகிறது. இதில் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கலியபெருமாள், முன்னாள் எம்.எல்.ஏ. கலையரசன், ஒன்றியக்குழு தலைவர் மைதிலிராஜேஷ்குமார், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் வடகரை சுல்தான் ஆரிப், விற்குடி நளபதி, காரையூர் செந்தில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர்கள் , ஒன்றிய ஜெயலலிதா பேரவை செயலாளர் ஆறுமுகப்பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கால்நடைத்துறை உதவி இயக்குனர் ரமேஷ் நன்றி கூறினார்.

## <u>பொங்கலையொட்டி 200 ஆலைகளில் வெல்லம் தயாரிக்கும் பணி தீவிரம் விலை உயர வாய்ப்பு</u>



வெல்லத்தை உருண்டை பிடிக்கும் பணியில் ஈடுபட்டு உள்ள தொழிலாளர்கள்.

பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதை யொட்டி பரமத்திவேலூர் பகுதியில் சுமார் 200-க்கும் மேற்பட்ட ஆலைகளில் வெல்லம் தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. மேலும் வெல்லம் விலை உயர வாய்ப்பு உள்ளதாகவும் வியாபாரிகள் தெரி வித்தனர். கரும்புபயிரீடு

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா சோழசிராமணி, ஜமீன் இளம்பள்ளி, கொத்தமங்கலம், ஜேடர்பாளையம், ஆனங்கூர், அய்யம்பாளையம், பிலிக்கல் பாளையம், கபிலர்மலை, பெரிய சோளிபாளையம், பரமத்தி வேலூர், பரமத்தி, சேளூர் சாணார்பாளையம், அண்ணாநகர், கொந்தளம் உள்ளிட்ட பல்வேறு பகுதி களில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்பட்டு உள்ளது. இந்த பகுதிகளில் விளையும் கரும்புகள் அனைத்தும் சோழசிராமணி, ஜேடர்பாளை யம், அய்யம்பாளையம், பிலிக் கல்பாளையம், அண்ணாநகர், கபிலர்மலை, சேளூர் உள் ளிட்ட பகுதிகளில் உள்ள 200-க்கும் மேற்பட்ட வெல்லம் தயார் செய்யப்படும் ஆலை களுக்கு கொண்டு செல்லப் படுகிறது. வெல்லம் தயாரிப்பு இவ்வாறு ஆலைகளுக்கு கொண்டு செல்லப்படும் கரும்புகள் சாறு பிழியப்பட்டு, கொப்பரைகளில் ஊற்றப்பட்டு பின்னர் கரும்பு பால் காய்ச்சப்படுகிறது. காய்ச்சப் பட்ட கரும்பு பால் பதமாக வந்த பின்னர் அச்சு வெல்லங்கள் தயார் செய்ய அச்சுகளில் ஊற்றப்படுகிறது. சிறிதுநேரம் கழித்து அச்சுகளில் ஊற்றப்பட்ட அச்சினை தலைகீழாக கவிழ்த்ததும் அச்சு வெல்லங்கள் கீழே விழுகிறது. இதேபோல் உருண்டை வெல்லம் தயாரிக்க காய்ச்சப் பட்ட கரும்பு பாலை ஒரு மரப்பலகையில் கவிழ்ந்து சிறிதுநேரத்தில் ஈரத்துணியால் உருண்டை பிடித்து அடுக்கி வைக்கின்றனர்.

பொங்கல்பண்டிகையையொட்டி...

இந்த நிலையில் தமிழர்களின் திருவிழாவான பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதை யொட்டி பரமத்தி வேலூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள சுமார் 200-க்கும் மேற்பட்ட ஆலை களில் வெல்லம் தயாரிக்கும் பணி தீவிரம் அடைந்து உள்ளது. இந்த வெல்ல ஆலைகளில் அச்சு வெல்லம் மற்றும் குண்டு வெல்லம் தயார் செய்யும் பணியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டு உள்ளனர். இவ்வாறு தயாரான அச்சுவெல்லம் மற்றும் குண்டு வெல்லங்களை 30 கிலோ கொண்ட தனித்தனி மூட்டை களாக (சிப்பம்) கட்டப்பட்டு

பிலிக்கல்பாளையத்தில் ஒவ் வொரு வாரமும் புதன்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் நடைபெறும் வெல்ல ஏலச்சந்தைக்கு கொண்டு செல்லப்பட்டு ஏலம் விடப்படுகிறது. இங்கு ஏலம் எடுத்த வெல்லங்களை தமிழகம் மற்றும் கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங் களுக்கு லாரிகள் மூலம் எடுத்து செல்கின்றனர்.

விலைஉயரவாய்ப்பு

இந்த நிலையில் பொங்கல் பண்டிகையில் சர்க்கரை பொங்கல் வைப்பதற்கு வெல்லம் முக்கிய பங்கு வகிப்பதாலும், இந்த ஆண்டு அதிகளவில் முன்பதிவு வந்து உள்ளதாலும் இந்த பகுதியில் வழக்கத்தை விட கூடுதலாக வெல்லம் தயாரிக்கப்பட்டு வருவதாக ஆலை நிர்வாகத் தினர் தெரிவிக்கின்றனர். இதேபோல கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இந்த பகுதியில் வெல்லத்தின் விலை உயர வாய்ப்பு உள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.